**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 95/2025</u>**

**<u>நாள் – 02.07.2026</u>**

**PW – 2** ராமகுரு

**த/பெ.** வடிவேல்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of July 2026.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன பாலமுருகனின் மனைவி ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்றால் இல்லை அவருக்கு ஓய்வூதியம் கிடையாது. பாலமுருகன் 2 வருட காலம் மட்டும்தான் நிரந்தர பணியாளராக பணிபுரிந்து வந்தார். அவர் 5 வருடகாலம் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால்தான் ஓய்வூதியம் அவருக்கு கிடைக்கும். இறந்துபோன பாலமுருகன் தகுதிகாண் பருவத்தை மட்டும்தான் பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவர் நிரந்தர பணியாளராக பணியமர்த்தப்பட்டார் என்பது சம்பந்தமான உத்தரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்த உத்தரவு சா.சா.ஆ.2 பணி பதிவேட்டிலேயே பக்கம் 10–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் மேற்படி 13.12.2024–ம் தேதியிட்ட உத்தரவு குறித்த பதிவானது பாலமுருகனின் தகுதிகாண் பருவத்தை பூர்த்தி செய்ததை மட்டும்தான் காட்டுகிறது என்றும், ஆனால் அவர் நிரந்தர பணியாளராக பணியமர்த்தப்பட்டார் என்ற உத்தரவாக எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. இறந்துபோன பாலமுருகன் எங்களது துறையில் பணிபுரிந்து வந்தார் என்பதற்காக வேண்டி அவருக்கு அதிக இழப்பீடு

கிடைக்கவேண்டும் என்பதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.07.02 18:57:44 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI**</u>

<u>**MCOP. No,95/2025**</u>

<u>**PW - 3**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : கண்ணன் | | : | |
| **Father Name** | : ராஜன் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of July 2026.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர்கள் தரப்பு 3–வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>**4–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

இந்த விபத்து சம்பந்தமாக போலீசில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு விபத்து சம்பந்தமான குற்ற வழக்கில் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியம் ஏதேனும் அளித்தேனா என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டி சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது அதிக போக்குவரத்து நிறைந்த ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திலிருந்து எதிர் திசையில் உள்ள டீக்கடையில்தான் பேசிக்கொண்டிருந்தேன். இந்த விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்

என்றால் சத்துணவு அமைப்பாளர் மல்லிகா என்பவர்தான் புகார் கொடுத்தார். பள்ளியின் முகப்பில் கிழக்கிலிருந்து மேற்காக லாரி பின்புறமாக வந்தபோதுதான் விபத்து நடந்தது. அந்த லாரி பின்புறமாக எடுத்து சிறிது தொலைவு அதாவது 10 அடி தூரம் வந்தவுடனே விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தானது பள்ளியின் முகப்பில் வைத்து நடந்துள்ள நிலையில் அந்த பள்ளியின் எதிர்திசையில் உள்ள டீக்கடையில் இருந்து விபத்தை நான் நேரில் பார்க்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் அந்த விபத்து நடந்த ரோடானது அதிக போக்குவரத்து கொண்ட ரோடாக உள்ள நிலையில் நான் எதிர்திசையில் இருந்துகொண்டு பின்புறமாக சென்ற வாகனத்தை நான் பார்த்ததாக சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அதனால் என்னை நேரில் கண்ணுற்ற சாட்சியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

4-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணையையே 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.07.02 18:57:55 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**